1992 பிப்ரவரி 5]

காலத்திலேயே நிறைவேற்றப்பட இருந்த பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாத காரணத்தினாலும் பரமக்குடி நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக எஸ். எஸ். கோவில், முத்தானந்தம் பள்ளித்துறை..........
....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரராஜ் கேள்விக்கு வரவேண்டும். நீங்கள் பெருந்தலைவர் காலத்திலிருந்து கேள்வி நேரத்தில் பேசுவது சரியாக வராது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: போன்ற பகுதிகளில் சாக்கடை ஆற்றில் கலப்பதினால் ஆற்றிலிருந்து குடிநீர் பெறப்படும் இடங்களில் காலரா, மஞ்சள் காமாலை போன்ற வியாதிகள் பரவுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே, நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு, மருத்துவ நலத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற இந்தக் காலத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து சாக்கடை, ஆற்றில் குடிநீர் பெறப்படும் இடங்களில் கலக்காமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்த பரமக்குடி நகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தொகை 1 இலட்சத்திற்கும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைப்பதற்கு அரசால் இயலாது என்ற நிலையில் வைகை ஆற்றில் கரையை ஒட்டி சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் திட்டம் தயாரிக்கும்படி கோரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கழிவுநீர் வைகை ஆற்றிற்குச் செல்கிற வாய்ப்பு இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் இதன்மூலம் தீர்க்கப்படும் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 54, டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

54—

கன்னியாகுமரியில் மாவட்ட கூட்டுறவு வங்கி கிளை.

*3114)—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளை தற்பொழுது திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும்(ஆ) கன்னியாகுமரியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியினுடைய புதிய கிளையை கன்னியாகுமரியிலே திறப்பதற்கு அரசு அனுமதித்து இருக்கிறது. அது விரைவிலே துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு குமரித் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வங்கிக்குச் சொந்தமாக புதியதாக கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய கிளை உடனடியாகத் துவங்கப்படும். கட்டிடம் கட்டி முடிப்பதற்கு சற்று கால தாமதம் ஆகும். அதற்கு நிதியும் தேவை. ஆகவே, அது பின்னாலே பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 55. திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

55—

ஆலங்குளத்தில் விவசாயக் கல்லூரி.

*1328)— திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம், எனில், அதற்கான பணி எப்போது துவக்கப்படும் ?